# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS .No.60/2023

| பெயர் | | திரு. முருகானந்தம் | ஊர் | : | |
|---|---|---|---|---|---|
| த.பெ. | : | திரு.கோவிந்தராஜன் | மாவட்டம் | : | |
| வயது | : | | தொழில் | : | |

2025ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 1ஆம் நாள் **.பிசா.3 ன்** வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54-வது விதியின் 95வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.D.சுரேந்தர் மொழிபெயர்ப்பாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

<u>முதல் விசாரணை</u>

சாட்சியத்தின் முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். இதில் உள்ள விபரங்கள் எல்லாம் நான் சொன்னவைதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.

<u>வாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

நெடுமாறன், ஐயப்பன், முகமுதுரிஸ்வான் ஆகியோரை எப்படி தெரியும் என்றால் 5ஆம் பிரதிவாதி கோவிந்தசாமி மூலம் தெரியும். வா.சா.ஆ.2 ஆவணத்தில் நானும் கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் ஆமாம். வா.சா.ஆ.2 ஆவணத்திற்கு வாசகம் யார் சொன்னது என்றால் நெடுமாறன், கோவிந்தசாமி. வா.சா.ஆ.2 தயார் செய்யும்போதும் அதற்கு முன்பும் வாதியிடம் எந்த தொகையும் கொடுக்கவில்லை என்றால் ஆமாம். அதேபோல் வா.,சா.ஆ.2 தயார் செய்தபோது தொகை கொடுப்பது தொடர்பாக எந்த ஒரு நடவடிக்கையும் ஏற்படவில்லை என்றால் ஆமாம். வா,சா.ஆ.2 ஆவணத்தை அனுசரித்து 5ஆம் பிரதிவாதிக்கு கிரயம் செய்து கொடுத்தபிறகாவது வாதிக்கு தொகை கொடுத்தோமா என்றால் இல்லை. வாதியிடம் இடம் சம்மந்தமாக கிரயம் பற்றி தொகை பற்றி எந்த இடத்திலும் பேசவில்லை என்றால் ஆமாம். வாதி கோரியபடி தாவா பரிகாரம் அவருக்கு கிடைக்ககூடியது என்றால் ஆமாம்.

1, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை வழக்கறிஞர் வேண்டுகோள் இணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- ப ,நாகராஜன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.